IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 63/2019 |
| | | D/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Karuppusamy | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **25-04-2023**

குறுக்கு விசாரணை (பி.வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்) : 25-04-2023**

உங்களார் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் பக்கம் 3ல் பாரா 10ல் சொல்லப்பட்டுள்ள ராமசாமி மணியன் என்பவர் உங்களுடைய தகப்பனார் குப்பாண்டியின் தகப்பனார் என்று குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. பங்காளி ஆவார். ராமசாமி மணியன் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்வதற்கு தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன். ராமசாமி மணியன் தற்சயம் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்து யாருடைய பெயரில் உள்ளது என்றால் மீனாட்சி என்பவர் பெயரில் உள்ளது. தாவா சொத்து மீனாட்சி என்பவர் பெயரில் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளளேன். பத்திரங்கள் கொடுத்துள்ளீர்களா என்றால் பத்திரம் கொடுக்கவில்லை, வீட்டு வரி ரசீது, தண்ணீர் வரி ரசீது கொடுத்துள்ளேன்.

தாவா சொத்தை எத்தனை வருடங்களாக நீங்கள் தான் அனுபவம் செய்து வருகிறீர்கள் என்பதற்கு உங்கள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் 60 வருடங்களாக அனுபவம் செய்துள்ளேன். நீங்கள் சொல்வது போல் 60 வருடங்களாக அனுபவம் செய்து வந்ததற்கு உங்கள் தரப்பில் எத்தனை வருடங்களுக்குண்டான அனுபவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனது தகப்பனார் பெயரில் ரசீது போட்டு கொடுத்தார்கள். அதற்கு பிறகு எனக்கு ரசீது போட்டு கொடுத்துள்ளார்கள். உங்களால் தாவா சொத்தை 60 வருடங்களாக அனுபவம் செய்து வந்ததாகவும், தகப்பனார் பெயரில் ரசீது ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு பின்னிட்டு உங்கள் பெயரில் ரசீது ஏற்பட்டுள்ளதாகவும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றும், தாவா சொத்தில் எந்த காலத்திலும் நீங்கள் அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்வது தவறு. சர்வே எண்.80/6ஏ2ல் எத்தனை பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது

என்று உங்களுக்கு தெரியுமா என்றால் மொத்தம் 4 பேர்களுக்கு பாத்தியப்பட்டது ஆகும்.

நீங்கள் எந்த வருடத்தில் தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்தீர்கள் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. உங்களால் தாக்கல் செய்யப்பட்ட பிரமான வாக்கு மூலத்தில் சர்வே எண்.80/6ஏ என்பது மீனாட்சி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளதில், அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வீட்டு வரி ரசீது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எத்தனை செண்ட் மீனாட்சி என்பவர் பெயரில் உள்ளது என்றால் சுமார் 3 செண்ட் இருக்கலாம். மேற்படி 3 செண்ட் என்பது மீனாட்சியம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியமா, அல்லது அனுபவ சுவாதீனத்தின் மூலம் பாத்தியமா அல்லது கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியமா என்றால் பூர்வீக பாத்தியம் ஆகும். அவ்வாறு மீனாட்சியம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் என்னுடைய பாட்டனார் அவர்களால் பெண் வாரிசான மீனாட்சிக்கு சொத்து கொடுக்கப்பட்டு, பின்னிட்டு மீனாட்சிக்கு வாரிசுகள் இல்லாததால் என்னுடைய தகப்பனாருக்கு வாரிசு அடிப்படையில் கிடைத்த சொத்தாகும். மீனாட்சி என்பவருக்கு வாரிசுகள் இல்லாததின் அடிப்படையில் உங்களுக்கு கிடைத்த சொத்து என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

4 பங்காளிகளுக்கு தாவா சொத்து பாத்தியம் என்று உங்களால் மேலே சொன்ன வகையில், யார் யாருக்கு எவ்வளவு பாத்தியம் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து மீனாட்சியம்மாளிடம் இருந்து உங்களுக்கு எவ்வாறு கிரையம் ஏற்பட்டது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் தற்போது உங்களால் வீடு கட்டியுள்ளதாக சொல்வதற்கு உங்கள் தரப்பில் பஞ்சாயத்து மூலம் கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் தரப்பில் வீடு கட்டுவதற்கு முன் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

தாவா சொத்தை அளப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வந்தாரா என்றால் வந்தார். நீதிமன்ற ஆணையரிடம் உங்கள் தரப்பில் என்ன ஆவணம் கொடுத்துள்ளீர்கள் என்றால் ஆவணம் ஏதும் கொடுக்கவில்லை. உங்களது பங்காளிகள் பெயர் என்ன என்றால் பெயர் ஞாபகமில்லை. தாவா சொத்து ஆதியில் அதாவது உங்கள் பாட்டனார் காலத்தில் எவ்வளவு இடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஆனால் எங்கள் இடத்திற்கு மட்டும் 3 செண்ட் உள்ளது. உங்களால் வீடு கட்டியுள்ளதாக சொல்லக் கூடிய சொத்தின் நீள அகலம் எவ்வளவு என்றால் 17 அடி அகலம், நீளம் 21 அடி ஆகும். உங்களால் சொல்லக்கூடிய 17 அடி அகலம் மற்றும் 21 அடி நீளம் உள்ள சொத்தின் கிழபுற பகுதியானது உங்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் என்னுடைய வீட்டிற்கு கிழபுறம் தான் புறம்போக்கு அமைந்துள்ளது அதற்கும்

எனக்கும் சம்பந்தமில்லை.

உங்களால் சொல்லக்கூடிய 17 அடி அகலம் மற்றும் 21 அடி நீளம் உள்ள சொத்திற்கு மேல்புறம் யார் இருக்கிறார்கள் என்றால் முத்தழகு என்பவர் உள்ளார். மேல்புறம் வாதி குப்பாண்டி இடம் உள்ளது என்றும், உங்களால் வழக்கிற்காக முத்தழகு என்பவர் இடம் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் அது சரியல்ல. உங்களால் வாதி குப்பாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்ட இடத்தை தான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளீர்கள் என்று சொன்னால் குப்பாண்டி இடத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லை. அது தவறு. உங்களுக்கு பாத்தியமில்லாத இடத்தில் ஏற்கனவே 3 செண்ட் இடத்தையும், அவ்வாறு ஆக்கிரமித்திருக்கும் போது அதன் அருகில் வாதி குப்பாண்டிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளீர்கள் என்று சொன்னால் எனக்கும் குப்பாண்டி இடத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

உங்களுக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்குண்டான பட்டா ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. உங்களது வீட்டிற்கான நான்கெல்லை தெரியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் ஞாபகமில்லை. உங்களது பிரமான வாக்கு மூலத்தில் 2வது பக்கத்தில் 3ம் பாராவில் தாவா சொத்தின் நான்குமால் சொத்து விபரம் தாவா இடத்தில் இருந்து அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்பதை நிரூபணம் செய்வதற்கு வருவாய் ஆவணங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உங்களால் வீடு கட்டியதுபோக மீதி உள்ள இடம் எவ்வளவு உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி